வன விலங்குகளால் அபாயம் நேரிடும் மனிதர்களுக்கும், கால்நடைகளுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்க அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வன விலங்குகளால் மனிதர்களுக்கு உயிர்ச் சேதமோ, காயமோ அல்லது கால்நடைகளுக்குச் சேதமோ, பயிர்ச் சேதமோ ஏற்பட்டால் அதன் தொடர்பாக வரும் கோரிக்கைகளின் மேல் வனத்துறைத் தலைவர் (வன உயிரினம்) அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு இழப்பீட்டுத் தொகை இதுகாறும் வழங்கி வரப் படுகிறது. இறந்துவிட்ட கால்நடையின் மதிப்பில் 50 சத விகிதம் அல்லது ரூ. 500 இதில் எந்தத் தொகை குறைவாக உள்ளதோ அந்தத் தொகை இழப்பீடாக அளிக்கப்பட்டு வரு கிறது.

முற்பகல் 10-55

திருமதி அ. தி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதருள் மாணிக்கமாகத் திகழும் எங்களது இதய தெய்வத்தின்பொற்கால ஆட்சியில் தளவாடி, குன்றி மலைப் பகுதி களில் எல்லாம் மலைவாழ் மக்கள் அவர்கள் வீட்டுக்குப் பொருள் களை வாங்க நடந்தே வந்து கீழே சத்தியமங்கலம் வருவதாக இருந்தாலும், சில இடங்களில் குன்று பகுதிகளில் பஸ் போக்கு வரத்து இல்லாமல் இருக்கிறது. அந்த மாதிரி சூழ்நிலையில் அவர்கள் வருகை புரியும்பொழுது காட்டு யானைகளால் துரத்திக் கொல்லப்படுகின்றார்கள். நிறையபேர் இதுவரையிலும் பல இடங்களில் அது தனி நபராக வரும்போது ஒற்றை யானை வந்தால் அந்த நபரை எப்படியும் கொன்றுவிடுகிறது. அப்படிப் பட்ட சூழ்நிலையில் அவர் தலைப் பாதுகாத்துக்கொள்ள துப்பாக்கி உரிமம் வழங்கப்படுமா என அமைச்சர் அவர்களை பேரவைத் தலைவர் மூலம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டு யானைகள் மற்றவர்களைத் தாக் காத அளவு பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை எல்லாம் வனத்துறை செய்து வருகிறது. எனவே, தனியாருக்கு துப்பாக்கி லைசன்ஸ் வழங்குகிற ஒரு செயற்குறிப்பு இந்த அரசினுடைய எண்ணத்தில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 495, திரு. ஏ. கே. சி. சுந்தரவேல், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்,

495—

திருப்பத்தூர் வனச்சரகக் காடுகளில் சந்தன மரங்களை வெட்டி எடுத்தல்.

*21389—திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் வனச்சரகக் காடுகளில் உள்ள சந்தன மரங்கள் வெட்டி எடுக்கப்படாமல் அப்படியே வீணாகிறது. என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை வெட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் காற்றில் விழுந்த சந்தன மரங்கள் மற்றும் காய்ந்துபோன சந்தன மரங்கள் அனைத்தும் வேருடன் களையப்பட்டு திருப்பத்தூர் சந்தனமர இறுதித் துலக்க கிடங்கிற்கு அனுப்பப்பட்டு வருகிறது மற்றும் காட்டிலுள்ள மோட்டு மற்றும் வேர்களும் தோண்டி எடுக்கப்பட்டு அரசுக் கணக்கில் கொண்டுவந்து கிடங்கிற்கு அனுப்பப்படுகிறது. எனவே, திருப்பத்தூர் வனச் சரகக் காடுகளிலுள்ள வெட்டி எடுக்கப்பட வேண்டிய சந்தன மரங்கள் வெட்டியெடுக்கப்படாமல் இதுகாறும் ஏதும் வீணாக வில்லை.

திரு. ஏ. கே. சி. சுந்தரவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரங்களை வெட்டுவதற்கு, அகற்று வதற்கு ஏற்பட்டுள்ள செலவுகள் எவ்வளவு என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90ல் இந்த அரசு 17.32 லட்சம் ரூபாய் செலவழித்தது. சென்ற ஆண்டு 1992-93ல் 137.17 லட்சம் ரூபாய் செலவழித்தது. 1993-94ல் 120 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 496, திரு. கு. சீனிவாசன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

496—

மன்னார்குடி தொகுதியில் உள்ளிக்கோட்டை உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக உயர்த்துதல்.

*22350—திரு. கு. சீனிவாசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—